பக்கங்கள்:-16

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 15 | திங்கட்கிழமை | 02.10.2023 | அதிர்வு 62

## நந்திக்கடலில் மூழ்கி இளைஞர் உயிரிழப்பு

(பாலநாதன் சதீஸ்)

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச எல்லைக்குட்பட்ட நந்திக்கடல் பகுதியில் நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுஇடம்பெற்றஇந்தச்சம்பவம்தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, 02▶

# வெட்கக்கேடு!

## நீதி வழங்கிய நீதிபதியை வெளியேற்றியமை ரணில் – ராஜபக்ஷ அரசின் அதியுச்ச அராஜகம்

### ஜே.வி.பியின் தலைவர் அநுர கடும் சாடல்



– சுடர் திலீபன் –

“குருந்தூர்மலை விகாரை தொடர்பில் நீதியான தீர்ப்பை வழங்கிய முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா வைப்பதவியில்இருந்துவிலகச்செய்தஅரசு,உயிர்அச்சுறுத்தல் விடுத்து அவரை நாட்டிலிருந்தும் வெளியேற்றியுள்ளது. இது நீதித்துறை மீதான ரணில் – ராஜபக்ஷ அரசின் அதியுச்ச அராஜகத்தை எடுத்துக் காட்டுகின்றது. இந்த மோசமான நடவடிக்கை ஒட்டுமொத்த நாட்டுக்கும் வெட்கக் கேடானது.” 03▶

## நாடு திரும்பினார் ஜனாதிபதி ரணில்



ஜேர்மனியில் நடைபெற்ற பேர்லின் சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரச குழுவினர் நேற்று நாடு திரும்பினர். 06▶

### சட்டத்தின் ஆட்சி வேண்டுமெனில்

## இந்த அரசை வீட்டுக்கு அனுப்புவதே ஒரே வழி

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

– சுடர் திலீபன் –

“இலங்கையில் நீதித்துறை சுதந்திரத்தை இழந்துவிட்டது. நாட்டில் சட்டத்தின் ஆட்சி வேண்டுமெனில் இந்த அரசை வீட்டுக்கு அனுப்புவதே ஒரே வழி.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“அன்று பிரதம நீதியரசர் 02▶



## எரிபொருள்கள் விலை நள்ளிரவு முதல் உயர்வு



எரிபொருட்களின் விலையில் நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 02▶



மக்களின் புரட்சிக்கு – கிளர்ச்சிக்கு – எழுச்சிக்கு – முகம் கொடுக்க முடியாமல் நாட்டை விட்டு ஓட்டம் பிடித்தார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

எந்தப் படைகளை வைத்து சிறுபான்மையினரைக் கொன்றொழிக்கும் கொடூரப் போரை முன்னெடுத்து, அதன் பேரில் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றினாரோ, அந்தப் படைகள் அவரைக் காப்பாற்ற முன்வராமல் கைவிட்ட போது, வேறு 02▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழியின்றி நாட்டை விட்டு ஓடித் தப்பும் நிறைவேற்றதிகார ஜனாதிபதி என்ற கேவல நிலைக்கு ஆளானார் அவர்.

யானை மாலை போட்டதால் தெருப் பிச்சைக்காரி மகாராணியான 'சரஸ்வதி சபதம்' சினிமாப் படக் கதை போல – அரசியல் அரங்கில் தேடுவாரற்ற நிலையில் குப்பைக் கூடைக்குள் தூக்கி வீசப்பட்டு கிடந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு, படைகள் கைவிட்டமையால் நாட்டை விட்டு ஓட்டம் பிடித்த கோட்டாபயவின் வெற்றிடம் கை கொடுத்தது. அதே படைகளை வளைத்துப் போட்டு, அடக்குமுறை மூலம் மக்கள் எழுச்சியை முடக்கி, தன்னை அதிகாரத்தில் ஸ்திரப்படுத்தியிருக்கின்றார் ரணில்.

அடக்குமுறைப் போக்கை மிக மோசமாக அவர் தொடர்வது கண்கூடு. அது வெளிப்படையானது. அதில் சந்தேகம் இல்லை. ஆனால் அதில் கூட எல்லை மீறி அவர் அபத்தமாக நடப்பது நகைப்புக்கிடமானது.

நல்லிணக்கம் என்பது புரிந்துணர்வால் வருவது. உண்மைகளை மூடி மறைத்து, அடக்குமுறை மூலம் புரிந்துணர்வை ஏற்படுத்தலாம் என்ற போக்கில் – வெளிப்படையான பாங்கில் – அவர் செயல்படுகின்றமை பலரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கி இருக்கின்றது.

யுத்தத்தின் இறுதியில் இடம்பெற்ற யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக நீதி விசாரணைகள் நடைபெற்று, உண்மைகள் கண்டறியப்பட்டு, அவை வெளிக் கொணரப்பட்டு, பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்பட்டு, உரிய இழப்பீடுகள் வழங்கப்பட்டு, மீள நிகழாமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதே ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸில் மூலமும், பிற வழிகளிலும், கடந்த பத்தாண்டுகளுக்கு மேல் சர்வதேச சமூகம் வலியுறுத்தி வரும் விடயமாகும்.

இதில் யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவை சர்வதேச நியமங்களுக்கு அமைவாக விசாரணை செய்யப்படுவது, உண்மைகள் வெளிக்கொணரப்படுவது, நீதியும் பொறுப்புக் கூறலும் நிலைநாட்டப்படுவது போன்றவற்றுக்கு பௌத்த – சிங்களப் பேரினவாதத் தலைவர்களும் மக்களும் என்றும் தயாரில்லை. அதில் ரணில் விக்கிரமசிங்கவும் விலக்கல்லர்.

இந்த விடயங்களில் சர்வதேச சமூகத்தினதும், பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பினதும், காதுகளில் பூச்சுற்ற சில சொல்லாடலுடன் கூடிய அலுவலகங்கள், அமைப்புகளை ஸ்தாபிப்பதாக வெளிப்படுத்தி, பூச்சாண்டி காட்டுகின்றது சிங்களம்.

'காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம்', 'இழப்பீடுகளை வழங்குவதற்கான அலுவலகம்', 'உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு' என்ற சொல்லாடல்களில் அமைந்த கயிறுகள் அத்தகையவைதான்.

அந்த வரிசையில் இப்போது புதிதாக ஒன்று முளைத்திருக்கின்றது. அது – 'தேசிய ஐக்கியத்திற்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம்'!

பரந்த – விசாலமான – அளவுக்கு அதிகமான – அளவற்ற – நியாயாதிக்கங்கள் மற்றும் அதிகாரங்களுடன் இந்த அலுவலகத்தை உருவாக்க வழி செய்யும் 'தேசிய ஐக்கியத்திற்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்துக்கான சட்டம் மூலம்' வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நீதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட இந்தச் சட்டமூலத்தை அமைச்சரவை கடந்த 28ஆம் திகதி அங்கீகரித்துள்ளது.

இந்த அலுவலகம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து நன்கொடைகள் மற்றும் நிதியை அன்பளிப்பாகப் பெறும் அதிகாரம் கொண்டிருக்கும்.

அந்த அலுவலகத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதவாறு விசேட சட்ட விலக்களிப்பு அதிகாரமும் அதற்கு உள்ளது.

இந்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டால், ஓர் அமைச்சின் மேலதிக செயலாளர் தர நிலைக்குக் குறையாத பதவி நிலை அதிகாரி ஒருவர் பதவி வழி மூலம் அந்த அலுவலகத்திற்கு நியமிக்கப்படுவார். ஏனைய பத்துப் பேர் அமைச்சர்களின் பரிந்துரைகளின் மூலம் நியமனமாவர். இந்த 11 பேரையும் ஜனாதிபதியே நியமிப்பார்.

இந்த 11 பேர் கொண்ட அலுவலகமும் அதன் ஆளணித் தொகுதியும் நீதிமன்றம் போன்ற நியாயாதிக்கத்தை கொண்டிருக்கும்.

தேசிய ஐக்கியம், நல்லிணக்கம், நிலையான சமாதானம் ஆகியவற்றை முன்னெடுப்பதற்கான பரிந்துரைகளையும் வழிபடுத்தல்களையும் அரசுக்கும் சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளுக்கும் இந்த அலுவலகமே வழங்கும்.

இந்த அலுவலகத்தின் அல்லது அலுவலக அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கு யாரேனும் குந்தகமாகச் செயல்படுகின்றனர் என்று அல்லது முறையற்ற பிரசாரத்தை செய்கின்றனர் என்று அலுவலகம் கருதுமானால், அந்நபர் 'நீதிமன்ற அவமதிப்புக் குற்றம்' போன்ற ஒரு குற்றத்தைப் புரிந்தவராகக் கருதப்பட்டு அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்தச் சட்ட மூலத்தில் கூறப்பட்டுள்ளது.

அத்தகைய நபருக்கு எதிராக, அந்த அலுவலகத்தின் குற்றச்சாட்டின் பேரில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 'நீதிமன்ற அவமதிப்பு' குற்றச்சாட்டு விசாரிக்கப்படும்.

அதாவது அந்த அலுவலகம் ஒரு மேன்முறையீட்டு நீதிமன்றத்தை ஒத்த அதிகாரம் கொண்டது போன்று செயல்படும் என்பதுதான் இதன் அர்த்தம்.

இந்த அலுவலகத்திற்கு எதிராக அரசமைப்பின் 126 ஆவது பிரிவு (அடிப்படை உரிமை மீறல் முறைப்பாடுகள்) மற்றும் 140 ஆம் பிரிவு (ரிட் மனுக்கள், ஆள்கொணர்வு மனுக்கள்) ஆகியவற்றின் கீழ் தவிர, வேறு சட்ட பிரிவுகளில், வேறு எங்கேயும், சட்ட வழக்குகள், முறைப்பாடுகள் செய்யப்படவோ விசாரிக்கப்படவோ முடியாது என்றும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள சட்டமூலம் கூறுகின்றது.

மேற்படி நல்லிணக்க அலுவலகத்திற்கு எதிராக அரசமைப்பின் 126 மற்றும் 140 ஆம் பிரிவுகளுக்குக் கீழான அத்தகைய முறைப்பாடுகள் கூட உயர்நீதிமன்றத்தினால் மட்டுமே விசாரிக்கப்பட முடியும். மேன்முறையீட்டு நீதிமன்றத்தினாலோ, பிற அடுத்த நிலை நீதிமன்றங்களினாலோ, கீழ்நிலை நீதிமன்றங்களினாலோ விசாரிக்கப்பட முடியாதது அந்த அலுவலகம் எனத் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள சட்டமூல வடிவம் உறுதிப்படுத்துகிறது.

ஆக, ஜனாதிபதி நியமிக்கும் ஆள்களைக் கொண்ட ஓர் அலுவலகம், மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு சமனான வலுவுடைய ஒரு நீதிமன்றம் போல செயல்படும் அதிகாரத்துடன் உருவாக்கப்படுகின்றது. அதற்கு எதிராகக் கருத்து வெளியிடுபவர்கள், அதை எதிர்ப்பவர்களை 'நீதிமன்ற அவமதிப்பு செய்தவர்கள்' என்ற அடிப்படையில் விசாரணைக்கு நிறுத்தி, தண்டிக்க வைக்கும் அதிகாரம் கூட அதற்கு வழங்கப்படுகின்றது.

இது – இன்னொரு அடக்குமுறை வடிவம்தான். அதில் எந்தச் சந்தேகம் இல்லை.

அதுவும், 'நல்லிணக்க அலுவலகம்' என்ற பெயரில் அடக்குமுறைப் போக்கு அதிகாரங்களுடன் ஓர் அலுவலகத்தை உருவாக்க ரணில் விக்கிரமசிங்க என்ற நரி தந்திரசாலியால் மட்டுமே முடியும்.

புரிந்துணர்வின் மூலம் அல்ல, அடக்குமுறையின் மூலம்,அதிகார அடாவடி வாயிலாக, நல்லிணக்கத்தை எட்டலாம் என்ற புதிய அரசியல் சித்தாந்தத்தை நமக்குப் போதிக்கின்றார் ரணில்.

அடக்குமுறையால் – அச்சுறுத்தலால் – சம்பந்தப்பட்ட தரப்புகளை தனது தீர்மானத்துக்கு சம்மதிக்க – இணங்க – வைக்கச் செய்யலாம். அது, 'கட்டாய இணக்கமாகலாமே' தவிர, 'நல்லிணக்கமாக' முடியாது.

எல்லாம் காலத்தின் கோலம். நாம் என்ன செய்ய முடியும்?

## இந்த அரசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

ஷிராணியை வீட்டுக்கு அனுப்பினார்கள் ராஜபக்ஷக்கள். இன்று நீதிபதி சரவணராஜாவை நாட்டைவிட்டு வெளியுள்ளார்கள் ரணில் – ராஜபக்ஷக்கள்.

இப்படியான ஆட்சியாளர்கள் தேவையா என்பதைப் நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும். இந்த அரசு நீடித்தால் நாட்டில் சட்டத்தின் ஆட்சியை எதிர்பார்க்கவே முடியாது.

எனவே, ஆட்சி மாற்றத்துக்கான பயணத்தில் சகல மக்களும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கைகோர்க்க வேண்டும்." – என்றார்.

## எரிபொருள்கள் விலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 4 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 365 ரூபாவாகும்.

அத்துடன், ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 420 ரூபாவாகும்.

ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 351 ரூபாவாகும்.

சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 62 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 421 ரூபாவாகும்.

அதேபோல், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 11 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் புதிய விலை 242 ரூபாவாக்கும்.

## நந்திக் கடலில் மூழ்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மந்துவில் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய தர்மராசா நிசாந்தன் என்ற இளைஞர் நேற்று அதிகாலை 5.30 மணிக்கு வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்ற நிலையில் நந்திக்கடல் பகுதியில் மீட்கப்பட்டுள்ளார்.

கோயிலுக்கு முன்னால் உள்ள நந்திக் கடலில் நீரில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்டு புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# டிராக்டர் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வாய்க்காலினுள் விழுந்ததில் சாரதி சாவு

## திருமலையில் நேற்று சம்பவம்



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை–சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்கநகர் கிராமத்தில் டிராக்டர் விபத்துக்குள்ளானதில் மூன்று பிள்ளைகளின் தந்தை உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 11.30 மணியில் இடம்பெற்றுள்ளது. விபத்தில் மூதூர் – பாரதிபுரம் கிராமத்தைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சுந்தரவதனன் (வயது 39) என்பவரே உயிரிழந்துற்றார்.

உழவு வேலைக்காக பாரதிபுரம் பகுதியில் இருந்து கிளிவெட்டி – தங்கநகர் நோக்கிச் சென்றபோது தங்கநகர் பகுதியில் வைத்து டிராக்டர் வேகக் கட்டுப்பாட்டை இழந்து அருகில் உள்ள வாய்க்காலினுள் விழுந்து விபத்து நேர்ந்துள்ளது.

டிராக்டரைச் செலுத்தி வந்த மூன்று பிள்ளையின் தந்தையான மேற்படி இளம் குடும்பஸ்தர் அதில் உயிரிழந்துள்ளார்.

அத்துடன் அருகில் இருந்த நபர் சிறு காயங்களுக்குள்ளான நிலையில் தப்பியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பொலிஸாரின் தடுப்பில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் கைவிலங்குடன் தப்பியோட்டம்

பொலிஸ் தடுப்பில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் கைவிலங்குடன் தப்பியோடியுள்ளார்.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு ஒன்றை தன்னிடம் வைத்திருந்தமை தொடர்பில் சந்தேகத்தில் மித்தெனிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்பில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபரே கைவிலங்குடன் தப்பிச் சென்றுள்ளார் என்று மித்தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.


தப்பியோடிய சந்தேகநபர் மித்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெபொக்காவ மேற்கு பிரதேசத்தில் வசிப்பவராவார்.

கடந்த மாதம் 27ஆம் திகதி, பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று கைக்குண்டுடன் இவரைக் கைது செய்தது.

அதன் பின்னர், நீதிமன்றில் பெறப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் சந்தேகநபர் மித்தெனிய பொலிஸ் தடுப்பில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று தப்பிச் சென்றுள்ளார்.

# முல்லைத்தீவு நீதிபதியின் பதவி விலகல் குறித்து நாளை அதிரும் நாடாளுமன்றம்!

## கேள்விக்கணைகளைத் தொடுக்க எதிரணிகள் தீர்மானம்



உயிர் அச்சுறுத்தல் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா பதவி துறந்த விவகாரம் தொடர்பில் எதிரணிகள் நாடாளுமன்றத்தில் கேள்விக்கணைகளைத் தொடுக்கவுள்ளன.

ஒக்டோபர் மாதத்துக்குரிய முதல் வார நாடாளுமன்ற கூட்டத்தொடர் நாளை 3ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இவ்விவகாரம் தொடர்பில் 27/2இன் கீழ், நீதி அமைச்சரிடம் கேள்விகளை எழுப்பவுள்ளார்.

அத்துடன், தேசிய மக்கள் சக்தி, சுயாதீன அணிகளும் முல்லைத்தீவு நீதிபதி விவகாரத்தைச் சபைக்குக் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளன.

அதேவேளை, இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளும், இந்த விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றத்தின் கவனத்தை ஈர்க்கவுள்ளன.

### வெட்கக்கேடு…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி…)

– இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"சிங்களக் கடும்போக்காளர்களும், ரணில் – ராஜபக்ஷ அரச தரப்பினரும் தமிழர்களுடன் மீண்டும் மோதுகின்றார்கள். குருந்தூர்மலை விகாரையை மையமாக வைத்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியின் கொழும்பு இல்லத்தை இடித்தழிக்க அவர்கள் முயற்சி எடுத்தார்கள். தற்போது அந்த விகாரை தொடர்பில் நீதியான தீர்ப்பு வழங்கிய நீதிபதியைக் கொலை செய்யவும் அவர்கள் முயன்றுள்ளார்கள்.

போர் முடிந்த பின்னும் இந்த ஆட்சியாளர்கள் பிரிவினையை விரும்புகின்றார்கள். ஒற்றுமையை ஒருபோதும் அவர்கள் விரும்பவில்லை.

சிங்களக் கடும்போக்காளர்களும், ரணில் – ராஜபக்ஷ அரச தரப்பினரும் புதிய விடயத்தைக் கொண்டு வந்து தீ வைக்க முயல்கின்றார்கள். ஆனால், அந்தத் தீ பற்றாது. ஏனெனில் நனைந்துள்ள தீப்பெட்டிக்குத் தீ வைக்க அவர்கள் முயல்கின்றார்கள். முன்னரைப் போன்று தீ பற்றாது. தமிழ் மக்கள் அது தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் இருக்கின்றார்கள்." – என்றார்.

# கிளிநொச்சியிலும் கவனவீர்ப்பு





காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் போரின் இறுதிக் கட்டத்தில் சரணடைந்த சிறுவர்களுக்கு நீதி கோரி கிளிநொச்சியிலும் நேற்றுக் கவன வீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சியில் கடந்த 2,474 நாள்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சர்வதேச சிறுவர் தினமான நேற்று இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அதாவது போரின் இறுதி கட்டத்தில் சரணடைந்த சிறுவர்களுக்கு நீதி கோரியும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரியும் குறித்த போராட்டமானது

கிளிநொச்சியில் அமைந்துள்ள – காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் – அலுவலகத்தின் முன்பாக இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# காத்மாண்டுவுக்கான ஸ்ரீலங்கன் சேவை திடீர் ரத்து இரு நூறு பயணிகள் அவதி




நேபாளத்தின் காத்மாண்டுவுக்கு நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்படவேண்டிய விமானம் ரத்து செய்யப்பட்டதால் இரு நூறுக்கும் மேற்பட்ட பயணிகள் விமான நிலையத்தில் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.

இந்தப் பயணிகளில் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடியும் ஒருவராவார்.

இந்த ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் யுடு-181 கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து நேற்றுக் காலை 08.20 மணிக்கு நேபாளத்தின் காத்மாண்டுவுக்கு புறப்படவிருந்தது.

அதற்காக காலை 07.15 மணிக்கு இராஜாங்க அமைச்சர் உட்பட இரு நூறுக்கும் மேற்பட்ட பயணிகள் இந்த விமானத்துக்கு அழைத்து வரப்பட்டனர். ஆனால், இந்த விமானம் காலை 11.00 மணி வரை கட்டுநாயக்க விமான நிலையத்தை விட்டு வெளியேறவில்லை, அதுவரை பயணிகளும் விமானத்தில் காத்திருந்தனர்.

பின்னர், குறித்த விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதால், இந்த விமானத்துக்கு பதிலாக வேறு விமானம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டும் அது நிறைவேறவில்லை. இந்நிலையில், நேபாளத்துக்கான நேற்றைய விமான சேவை இரத்துச் செய்யப்பட்டது.

# மாலைதீவின் புதிய ஜனாதிபதியை வாழ்த்தினார் இலங்கை ஜனாதிபதி



மாலைதீவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் மொஹமட் முயிசுவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

தொலைபேசி அழைப்பின் ஊடாகவே மொஹமட் முயிசுவுக்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வாழ்த்துகளைக் கூறியுள்ளார்.

இலங்கை – மாலைதீவு மக்களின் மேம்பாட்டுக்காக இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் இருதரப்பு உறவுகளைப் பலதரப்பு கூட்டுச் செயல்முறைகளாகப் பலப்படுத்திக் கொள்ளவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விருப்பம் தெரிவித்தார்.

அதேபோல் கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் மற்றும் முதலீட்டுத் துறைகளில் இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ளவது தொடர்பிலும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

மாலைதீவின் புதிய ஜனாதிபதியின் ஆட்சியில் சுபீட்சம் கிட்டும் என்ற எதிர்பார்ப்புடன், அந்நாட்டின் புதிய அரசுக்கும், மக்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

# வவுனியாவிலும் கவனவீர்ப்பு





சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று வவுனியாவிலும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்ற இந்தப் போராட்டம், யுத்தத்தின் போது காணாமல் போன பிள்ளைகள் மற்றும் இராணுவத்திடம் சரணடைந்தவர்களின் குடும்பங்களின் பிள்ளைகள் காணாமல் போனமை தொடர்பாகவும் நீதியான விசாரணைக்கு சர்வதேச விசாரணை தேவை எனவும் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், சகோதரர்களைத் தேடும் சிறுவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.










# நாவிதன்வெளி நெல்களஞ்சியத்தை நாசம் பண்ணிய யானைக் கூட்டம்!





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறைமாவட்டத்தில்தொடர்ச்சியாக யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருகின்றன. இதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன் வெளி – சவளக்கடை பிரதேசத்துக்குள் நேற்று இரவு புகுந்த யானைகள் நாவிதன் வெளி பிரதேச செயலகத்துக்கு அருகில் உள்ள நெல் களஞ்சியசாலையைத் துவம்சம் செய்துள்ளன.

மேலும், அங்கிருந்த நெல் மூடைகளை நாசப்படுத்தியமையுடன் அப்பகுதியில் உள்ள சுற்றுவேலிகளையும் யானைகள் தகர்த்துள்ளன.

அதேவேளை அப்பிரதேசத்தை அண்டிய பகுதியிலுள்ள சில பயிர்களுக்கும் பாரியளவில் சேதம் ஏற்பட்டுள்ளது.

இதனால் இரவு வேளைகளில் அப்பகுதியில் வசிப்பதற்கு பொதுமக்கள் அச்சப்படுகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## கனவுலகக் கற்பனைகள்

இந்த நாட்டில் கிடைக்காத - குறிப்பாகத் தமிழர்கள் உட்பட்ட சிறுபான்மையினருக்குக் கிட்டாத - ஒரு கனவுலக பொருள் குறித்து இலங்கையின் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவும், பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரியவும் பிரஸ்தாபித்திருக்கின்றார்கள்.

நீதிமன்றங்கள் சட்டவாட்சியை நிலைநிறுத்தும் அதே சமயம், சட்டத்தின்படி நீதியைத் தாங்கள் பெற முடியும் என்று ஒவ்வொரு பிரஜையும் உறுதியாக நம்பிக்கை கொள்ளத்தக்க நிலைமையும் இருக்க வேண்டும் என்று கூறி இருக்கின்றார் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ.

நீதித்துறை இங்கு சட்டத்தை நிலை நிறுத்தும் சீத்துவம் சந்தி சிரிக்கின்றது. இலங்கையின் நீதித்துறை மூலம் தங்களுக்கு நீதி கிட்டவே கிட்டாது என்பதைத் தங்களின் கடந்த காலப் பட்டறிவு மூலம் தொடர்ந்து உணர்ந்துள்ள தமிழர்கள், அதைத் தெளிவாக வெளிப் படுத்தியும் வருகின்றனர்.

அதனால்தான் நீதி அமைச்சர் கூறுகின்ற விடயம் கற்பனாவாதத்தில் விவரிக்கப்படும் கனவுலக மாயப் பொருள் என்றோம்.

'நீதி நிலைநாட்டப்படுவது மாத்திரமன்றி, நிலை நாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்' - என்ற முதுமொழியும் நம் நீதித்துறையில் உண்டு.

ஆனால் இலங்கையில், நீதித்துறையின் தனித்துவம், சுயாதீனம் போன்றவை கேள்விக்குறியாகியிருக்கும் இன்றைய சூழலில், அந்த நீதி நிலைநாட்டப்படுவதாக மக்களுக்குக் காட்டப்படுவது கூட சாத்தியமே இல்லை என்பது தெளிவு. நீதித்துறை குறித்து மக்கள் அவநம்பிக்கை கொள்ளும் விதமான செய்திகள், தகவல்களே தொடர்ந்து வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

சட்டத்தின் ஆட்சி நிலவும் ஒரு சமூகத்தில் ஒவ்வொரு குடிமகனும் தான் அநீதியை எதிர்கொள்ளும்போது நீதியை சட்டத்தின் மூலம் தேடிப் பெற முடியும் என்று நீதி அமைச்சர் கூறுகின்றார்

ஆனால் இங்கு நிலவுவது சட்டத்தின் ஆட்சி அல்ல என்பதுதான் சிறுபான்மையினரின் ஒட்டுமொத்த முடிவு; அனுபவப் பாடம்; பட்டறிவு.

இங்கு - இலங்கையில் - சட்டத்தின் ஆட்சி நிலவுவதாக இந்த நாட்டுத் தமிழர்கள் மனதளவில்தன்னும் நம்ப வில்லை. நம்பத் தயாராகவும் இல்லை.

சட்டத்தின் ஆட்சியையும் விஞ்சி அதிகாரம் செலுத்தக்கூடிய பௌத்த - சிங்களப் பேரினவாத வெறிப் போக்கே இங்கு மேலாதிக்கம் செய்கின்றது என்பது கண்கூடு.

சிறுபான்மையின மக்கள் மட்டுமல்லர், அவர்களின் அரசியல் தலைவர்களும் கூட, இந்த இலங்கைத் தீவில் நீதியான - சுயாதீனமான - ஒழுங்கு முறையான - ஒரு சட்டவாட்சி நடக்கின்றது என்று ஒரு கணம் மனதளவில் கூட நம்புவதற்குத் தயாராக இல்லை.

"நீதித்துறை, பொலிஸ் மற்றும் மத்தியஸ்த சபைகள் உட்பட நீதி அமைப்பினுள் உள்ள பல்வேறு நிறுவனங்களின் பாத்திரங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம்.

"ஒவ்வொரு பிரஜைக்கும், அவர்களின் அந்தஸ்து அல்லது செல்வத்தைப் பொருட்படுத்தாமல், நீதிக்கு சமமான அணுகலைப் பெறுவதை உறுதிசெய்ய இந்த நிறுவனங்கள் உள்ளன" - என்று பிரதம நீதியரசர் கூறி இருக்கின்றார். அவரும், நீதி அமைச்சரும் 'தேசிய சட்ட வாரம் - 2023' நிகழ்வில் இந்தக் கருத்துக்களை கூறியுள்ளனர்.

இலங்கையின் நீதி மற்றும் சட்டத் துறையை இவ்வளவு தூரம் சிலாகித்து அவர்கள் பேசுவதை நோக்கும்போது அவர்கள் கற்பனை உலகில் வாழ்கின்றார்களோ என்ற சந்தேகம்தான் தோன்றுகின்றது.

# குளவிக் கொட்டி தொழிலாளி பலி

லுணுகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹொப்டன் – யப்பாம தனியார் தோட்டமொன்றுக்குத் தொழிலுக்குச் சென்ற நபர் ஒருவர் நேற்று குளவிக் கொட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

குளவிக் கொட்டுக்குப் பின்னர், ஹொப்டன் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளித்த போதும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அந்த நபர் 53 வயதுடைய லுணுகலை ஹொப்டன் பங்களோ பிரிவைச் சேர்ந்தவராவார்.

அவரின் சடலம் ஹொப்டன் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை லுணுகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சீரற்ற காலநிலையால் 5 ஆயிரம் பேர் பாதிப்பு



சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் மூன்று மாவட்டங்களில் 5 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

1,275 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 51 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக இரத்தினபுரி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மழையுடன் கூடிய காலநிலை காரணமாக களுகங்கை, கிங்கங்கை மற்றும் நில்வலா கங்கையின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளதுடன், சில பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது என்று நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மழையுடனான காலநிலை தொடர்வதால், நாட்டின் 8 மாவட்டங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பு மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேல், சப்ரகமுவ, தெற்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் நேற்று இடியுடன் கூடிய மழை பெய்தது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் புத்தளம் மாவட்டங்களிலும் சில பிரதேசங்களில் பலத்த மழை பெய்தது.

## நாடு திரும்பினார்.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தற்கால உலக அரசியல் மற்றும் பொருளாதார சவால்களுக்குத் தீர்வு காண்பதற்கான உயர்மட்ட முன்னெடுப்பான 'பேர்லின் குளோபல்' மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த புதன்கிழமை அதிகாலை ஜேர்மனுக்குப் பயணமானார்.

சர்வதேச நாடுகளின் தலைவர்களின் பங்கேற்புடன் இந்த மாநாடு செப்டெம்பர் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் ஜேர்மனியின் பேர்லின் நகரில் இடம்பெற்றிருந்தது.

இந்தநிலையில் குறித்த மாநாடு நிறைவடைந்ததை அடுத்து தமது ஜேர்மன் விஜயத்தை நிறைவு செய்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பினார்.

நேற்றுக் காலை கட்டார் விமான சேவைக்கு சொந்தமான விமானம் மூலம் ஜனாதிபதியும் குழுவினரும் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

# மாற்றுத்திறனாளிகளுக்கான சட்டமூலத்துக்கு எதிராக இலங்கை மனித உரிமை ஆணைக்குழு போர்க்கொடி!

## பரிந்துரைகளை முன்வைத்து நீதி அமைச்சருக்குக் கடிதம்

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

அரசு முன்வைத்துள்ள மற்றுமொரு சட்டமூலம் எவ்வாறு மக்களின் மனித உரிமைகளை மீறுவதற்கு வழிவகுக்கும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு எச்சரித்துள்ளது.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பாதுகாப்பு சட்டமூலத்தின் 44 மற்றும் 45 பிரிவுகளுக்கு அமைய,

வளாகங்களுக்குள் நுழைவதற்கும், தேடுதலை நடத்துவதற்கும், விசாரணை செய்வதற்கும், தனிநபர்களை விசாரிப்பதற்கும் மாற்றுத்திறனாளிகள் தொடர்பிலான தேசிய சபைக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கைனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் நீதியரசர் எல்.டி.பி. தெஹிதெனிய கையொப்பமிட்டு நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பதில், அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்கள் உட்பட்வர்களால் உத்தியோகபூர்வ அதிகாரத்துடன் நியமிக்கப்படும் 13 உறுப்பினர்களுக்கு மேலதிகமாக, ஏனைய 12 உறுப்பினர்களை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்களின் ஆலோசனையுடன் ஜனாதிபதியினல் நியமிக்கப்படுகின்றனர்.

இந்த நியமனச் செயல்முறையானது, நியமனம்பெற்றவர்களின்சுதந்திரம்போதுமான அளவு உத்தரவாதம் அளிக்கப்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ள ஆணைக்குழு, அமைப்பு மற்றும் நியமன செயல்முறையை மீள்பரிசீலனை செய்யப் பரிந்துரைத்துள்ளது.

சபையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்துவதற்கு போதிய பாதுகாப்புகள் இல்லாத நிலையில், இவ்வாறான பரந்த அதிகாரங்களைச் சபைக்கு வழங்குவது பொருத்தமற்றது என மனித உரிமைகள் ஆணைக்குழு அமைச்சரிடம் மேலும் வலியுறுத்தியுள்ளது.

“அத்தகைய அதிகாரங்களைத் தன்னிச்சையாக செயல்படுத்துவது, அரசியலமைப்பின் பிரிவு 12 (1) இன் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கான அடிப்படை உரிமை உட்பட தனிநபர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதற்கு வழிவகுக்கும்.” – என்று மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில், மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பாதுகாப்பு சட்டமூலத்தின் 44 மற்றும் 45 பிரிவுகளை, மனித உரிமைகள் ஆணைக்குழு மீள்பரிசீலனை செய்யுமாறு பரிந்துரைத்துள்ளதோடு, உள்நுழைதல், தேடுதல்கள் மற்றும் விசாரணைகளை அங்கீகரிக்கும் அதிகாரங்கள் நீதித்துறை மேற்பார்வைக்கு உட்பட்ட அரசியல் ரீதியாக சுயாதீனமான நிறுவனத்துக்கு வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளது.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சாசனத்தின் கீழ் இலங்கை தனது கடமைகளை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்தும் வகையில் முன்வைக்கப்பட்டுள்ள இந்த சட்டமூலம்,

“மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாத்தல், ஊக்குவித்தல் மற்றும் அவற்றை நிறைவேற்றுவதற்கான பெறுமதியான சட்ட கட்டமைப்பை ஏற்படுத்துவதற்காக” சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

2023 செப்டெம்பர் 21 அன்று நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்சவுக்கு அனுப்பிய கடிதத்தில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தனிநபர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான வரைவு தொடர்பாக 5 பொதுவான பரிந்துரைகளையும், 19 பிரிவுகள் தொடர்பான தனது அவதானிப்புகளையும் பரிந்துரைகளையும் தனித்தனியாக வழங்கியுள்ளது.

பொதுவான ஐந்து பரிந்துரைகள்:-

1. பொருத்தமான தங்குமிடத்தின் தரம், இந்த வரைபின் விதிகளில் மிகவும் பரந்த அளவில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

2. மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாக்க, ஊக்குவித்தல் மற்றும் நிறைவேற்றுவதற்காக அரசு நடவடிக்கை எடுக்கையில, பாலினம் மற்றும் வயது உணர்திறன் ஆகியவற்றில் குறிப்பிட்ட அர்ப்பணிப்புடன், குறிப்பாக மாற்றுத்திறனாளிகள் மற்றும் பெண்கள் மற்றும் சிறுவர்களின் ‘பல்வேறு’ அல்லது ‘இடைப்பிரிவு’ பாகுபாட்டை எதிர்கொள்ளும் யோசனை பரந்த அளவில வரைபில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

3. சட்டமூலத்தின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள அதன் சுயாதீன கண்காணிப்பு பொறிமுறையாக ஆணைக்குழுவின் பாத்திரத்தின் துல்லியமான தன்மை மற்றும் நோக்கம் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் அர்த்தமுள்ள கலந்துரையாடல் நடத்தப்பட வேண்டும்.

4. மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய சபையின் அமைப்பு, நியமனம் செயல்முறை மற்றும் அதிகாரங்கள் ஆகியவை அரசமைப்பில் பொதிந்துள்ள மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் அதிக சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் வகையில் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

5. மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய சபையின் கீழ் உள்ள அமைச்சு, நீதி அமைச்சாக இருக்க வேண்டும்.

சட்டமூலத்தின் 19 உறுப்புரைகளை, ஒவ்வொன்றாக எடுத்து, ஆணைக்குழுவால் அவதானிக்கப்பட்டுள்ள குறைபாடுகள்மற்றும்இதுதொடர்பானஆணைக்குழுவின் பரிந்துரைகள் ஜனாதிபதிக்கும் பிரதி செய்யப்பட்டு அனுப்பப்பட்ட இந்தக் கடிதத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உறுப்புரை ஒன்பதானது ஐக்கிய நாடுகளின் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் தொடர்பான சாசனத்தின் 18ஆவது பிரிவின் பல கூறுகளைக் கொண்டிருந்தாலும், ஒருவர் நாட்டை விட்டு வெளியேற அல்லது உள்நுழைவதற்கான சுதந்திரம் உட்பட இயக்க சுதந்திரம் தொடர்பான விடயங்களை 9ஆவது உறுப்புரை குறிப்பிடவில்லை என சுட்டிக்காட்டியுள்ள ஆணைக்குழு வரைபில் அந்த விடயம் வலுப்படுத்தப்பட வேண்டுமெனப் பரிந்துரைத்துள்ளது.

உறுப்புரை 10 ஐ அவதானித்துள்ள ஆணைக்குழு, மாற்றுத்திறனாளி குழந்தைகள் தொடர்பான அனைத்து விடயங்களிலும், ‘குழந்தைகளின் நலன்களை’ முதன்மையாகக் கருத்தில் கொள்ள வேண்டும் எனப் பரிந்துரைத்துள்ளது.

மாற்றுத்திறனாளிகள் பற்றிய உறுப்புரை 15, பெண்களும் சிறுமிகளும் ‘பல பாகுபாடுகளை’ எதிர்கொள்வதைக் குறிப்பிடவில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய ஆணைக்குழு, அவர்கள் பாலினம் மற்றும் மாற்றுத்திறனாளி ஆகிய இரண்டிலும் பாகுபாட்டை எதிர்கொள்வதைக் குறிப்பிடுமாறு பரிந்துரைத்துள்ளது.

உறுப்புரை 22இன் ஊடாக, மாற்றுத்திறனாளிகளுக்கும், ஏனையவர்களுக்கு போன்று தரமான பராமரிப்பை வழங்கும் நோக்கத்துடன் பொது மற்றும் சுகாதார நிபுணர்களுக்கு தரநிலைகளை நிர்ணயிப்பதற்கும் பயிற்சிகளை வழங்குவதற்கும் அது கடமைகளை உள்ளடக்கியிருக்க வேண்டும் எனவும் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

இவை தவிர, சட்டமூலம் தொடர்பில் கவனத்தில் கொள்ள வேண்டிய பல விடயங்கள் குறித்தும் ஆணைக்குழு தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க...)

# நீதிபதியின் கருத்துகளை மாத்திரம் நம்ப முடியாதாம்

## முழு விசாரணை வேண்டும் என்று கூறுகிறார் குணதாஸ



“முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு வெளிநாட்டுத் தூதரகங்களுடன் தொடர்பு இருந்துள்ளது எனக் கூறப்படுகின்றது. எனவே, அவர் கூறும் காரணங்களை மட்டும் நம்பாமல் இதன் பின்புலத்தை அரசு கண்டுபிடிக்க வேண்டும்.”

– இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகர வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“முல்லைத்தீவு நீதிபதி ஏன் பதவி விலகினார் என்பது பற்றி சரியான காரணங்கள் இன்னும் வெளிவரவில்லை. அவர் கூறும் காரணங்களை மட்டும் ஆராயாமல், இது தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட்டு, உண்மை கண்டறியப்பட வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம்.

நீதிபதியை அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகள் இடம்பெற்றிருப்பின் அதனை நாம் கண்டிக்கின்றோம்.” – என்றார்.

# சிவனொளிபாதமலைக்கு அனுமதியின்றி செல்லாதீர்

## நுவரெலியா மாவட்ட செயலர் எச்சரிக்கை



அனுமதியின்றி பருவகாலம் இல்லாத காலப்பகுதியில் சிவனொளிபாதமலைக்குச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது என்று நுவரெலியா மாவட்ட செயலாளர் அறிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அனுமதியின்றிபருவகாலம்இல்லாதகாலப்பகுதியில்சிவனொளிபாதமலைக்குச் சென்று வழிபடலாம் என அண்மைய நாட்களில் வெளியான செய்திகள் உண்மையல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

2022 – 2023 சிவனொளிபாதமலை பருவகாலம் நிறைவடைந்துள்ள நிலையில், ஸ்ரீபாதஸ்தானதிபதி சப்ரகமு மாகாண பிரதம சங்கநாயக பெங்கமுவே தம்மதின்னவின் பணிப்புரைக்கமைய அனுமதியின்றி ஹட்டன் வீதி மற்றும் இரத்தினபுரி வீதி ஊடாகவும் சிவனொளிபாதமலைக்குச் செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

பருவகாலம் இல்லாத காலப்பகுதியில் சிவனொளிபாத மலைக்கு வருகை தரும்போது உரிய நிறுவனங்களின் அனுமதியைப் பெற்று நல்லதண்ணி மற்றும் இரத்தினபுரி பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் சிவனொளிபாதமலைப் பகுதியில் இடையிடையே பலத்த மழை பெய்து வருவதாலும், அங்கு செல்லும் படிகளில் பாரிய நீரோடை ஓடுவதாலும் ஸ்ரீசிவனொளிபாதமலைக்குச் செல்வது ஆபத்தானது என்றும் நுவரெலியா மாவட்ட செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கொதிகலன் குழாய் வெடித்ததில் இந்தியப் பிரஜை ஒருவர் மரணம்

## இருவர் காயங்களுடன் வைத்தியசாலையில்

வெலிபென்ன – தர்கா நகர் பகுதியில் உள்ள தொழிற்சாலை ஒன்றின் கொதிகலன் குழாய் ஒன்று வெடித்ததில் இந்தியப் பிரஜை ஒருவர் உயிரிழந்தார்.

அத்துடன், மேலும் இரண்டு இந்தியப் பிரஜைகள் படுகாயமடைந்த நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு குறித்த கொதிகலன் குழாய் வெடித்துள்ளது.

உயிரிழந்த இந்தியப் பிரஜை 34 வயதுடையவர் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## மாற்றுத்திறனாளி...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அதற்கமைய, அனைத்து மாற்றுத்திறனாளிகளின் ‘வாழ்வதற்கான உரிமை’ குறித்த குறிப்பிட்ட விதிகள் வரைபில் சேர்க்கப்பட வேண்டுமென ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

மேலும், ஒருவரின் உடல் மற்றும் மன ஒருமைப்பாட்டுக்கு மதிப்பளிக்கும் உரிமையை வரைபில் குறிப்பாக சேர்க்க வேண்டும் எனவும், மாற்றுத்திறனாளிகளின் தனியுரிமைக்கான உரிமை சட்ட வரைபில் அங்கீகரிக்கப்பட வேண்டும் எனவும் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

முறையாக அடையக்கூடிய தரத்திற்கு ஏற்ப போதுமான வாழ்க்கைத் தரம் மற்றும் சமூகப் பாதுகாப்பிற்கான உரிமையையும் இந்த வரைபு அங்கீகரிக்க வேண்டுமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

17 ஜூலை 2023 அன்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் அமைச்சு பகிர்ந்து கொண்ட மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பாதுகாப்பு சட்ட வரைபு குறித்து, ஆணைக்குழு தனது அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை முன்வைத்து, 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 10 (சி) இன் படி, ‘அடிப்படை உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் சட்டங்களை இயற்றுவதில் அரசுக்கு ஆலோசனை வழங்குவதும் உதவுவதும்’ என்ற ஆணையை நிறைவேற்ற நீதி அமைச்சு வழங்கும் ஒத்துழைப்புக்கு ஆணைக்குழு தனது நன்றியைத் தெரிவித்துள்ளது.

### மாணவர்கள் கொலை குறித்து புகைப்படங்கள் வெளியானதால்

# மணிப்பூரில் மீண்டும் வன்முறை; நான்கு பேர் அதிடியாகக் கைது





மணிப்பூர் கலவரத்தின் தொடர்ச்சியாகக் கடந்த ஜூலை மாதம் மாயமான மாணவர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்ட புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வெளியாகி, மீண்டும் வன்முறை வெடித்துள்ள நிலையில் 2 பெண்கள் உட்பட 4 பேரை சி.பி.ஐ. அதிரடியாகக் கைது செய்துள்ளது.

மைத்தேயி இனத்தைச் சேர்ந்த 2 மாணவர்கள் கடந்த ஜூலை மாதம் 6ஆம் திகதி மாயமானார்கள். மணிப்பூர் மாநில தலைநகரான இம்பாலைச் சேர்ந்த மாணவர் பிஜாம் ஹேமன்ஜித் (வயது 20) மற்றும் மாணவி ஹிஜாம் லிந்தோய்ங்கன்பி (17) ஆகியோர் ஆயுதம் ஏந்திய கும்பலால் கடத்தப்பட்ட நிலையில், அவர்கள் பிணைக்கைதிகளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டனர்.

இதுதொடர்பான புகைப்படங்கள் தற்போது இணையதளங்களில் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் இது அந்த மாநிலத்தில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. மணிப்பூர் வன்முறை தொடர்பாக தற்போது சி.பி.ஐ. விசாரணை நடத்தி வரும் நிலையில் மாணவர்கள் கொலை குறித்தும் அவர்கள் விசாரிக்கத் தொடங்கியுள்ளனர். இதன்படி சி.பி.ஐ. இயக்குநர் மணிப்பூர் சென்று விசாரணை மேற்கொண்டார்.

இந்நிலையில், 2 மாணவர்கள் கொலை வழக்கில் இரு பெண்கள் உட்பட 4 பேரை சி.பி.ஐ. நேற்று (01) அதிரடியாகக் கைது செய்துள்ளது.

இவர்கள் தலைநகர் இம்பாலிலிருந்து 51 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சுராசந்த்பூரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நால்வர் கைதான சுராசந்த்பூர்தான் மணிப்பூர் வன்முறைக்கான முதல் காரணமாக இருந்தது. இங்குதான் கடந்த மே மாதம் 3ஆம் திகதி வன்முறை வெடித்து மாநிலம் முழுவதும் பரவியது என்பது குறிப்பிடத்தக்கது.

# வெங்காயம்

## போன்றது மாநில தலைவர் பதவி

### அண்ணாமலையின் கருத்தால் பரபரப்பு



"தமிழ்நாடு பா.ஜ.க. மாநிலத் தலைவர் பதவி என்பது வெங்காயம் போன்றது" என அண்ணாமலை தெரிவித்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க. கூட்டணி முறிவடைந்துள்ள நிலையில், அண்ணாமலையின் தலைமைப் பதவிக்கு ஆபத்து என்றும் தமிழக பா.ஜ.க. தலைவர் பதவிக்கு புதியவரை நியமனம் செய்ய வாய்ப்பு உள்ளது எனவும் கூறப்பட்டது.

இதுகுறித்த கேள்விக்குப் பதில் அளித்த அண்ணாமலை,

"தமிழக பா.ஜ.க. மாநிலத் தலைமைப் பதவி என்பது வெங்காயம் போன்றது. நான் பதவிக்காக வந்தவனல்லன். ஏற்கனவே எனது பதவியைத் துறந்து வந்தவன் நான். கட்சியை வலுப்படுத்துவது மட்டுமே எனது நோக்கம்.

கூட்டணி பற்றி கட்சி மேலிடம் முடிவெடுக்கும். எவரையும் அனுசரித்துச் செல்லும் பழக்கம் என்னிடம் கிடையாது" என்றார்.

# குழந்தைக்கு பெயர் வைக்க நீதிமன்றம் வரை சென்ற தாய்

கேரளாவில் தாம் பெற்ற குழந்தைக்குப் பெயர் வைப்பதில் கணவன்-மனைவி இடையே தகராறு ஏற்பட்டது. இதனால் 4 ஆண்டுகளாகக் குழந்தை பெயரில்லாமல் வளர்க்கப்பட்ட நிலையில் இந்த விடயம் கேரளா உயர்நீதிமன்றம் வரை சென்றுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் கேரளத் தம்பதியருக்கு குழந்தை பிறந்தது. இதையடுத்து குழந்தைக்கு பிறப்புச் சான்றிதழை வைத்தியசாலையிலிருந்து பெற முயன்றனர். அப்போது குழந்தைக்கான பெயர் விபரம் கேட்கப்பட்டது. ஆனால் குழந்தைக்கு கணவர் ஒரு பெயரையும், அவரது மனைவி ஒரு பெயரையும் கூறினர்.

இதனால் இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதனால் குழந்தையின் பிறப்புச் சான்றிதழ் பெயர் எதுவுமின்றிப் பெறப்பட்டது. இதற்கிடையே கருத்து வேறுபாட்டால் இருவரும் பிரிந்து வாழத் தொடங்கினர்.

தற்போது அந்தக் குழந்தைக்கு 4 வயதாகியுள்ள நிலையில், குழந்தையைப் பாடசாலையில் சேர்க்க வேண்டி ஏற்பட்டதால் குழந்தையின் பெயரைப் பதிவு செய்ய தாயார் கேரளா உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார்.

அதன்படி நீதிமன்றத்துக்கு உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, குழந்தைக்குத் தாய் தேர்வு செய்த பெயருடன் தந்தையின் பெயரும் சேர்த்துச் சூட்டப்பட்டுள்ளது.

குழந்தை தற்போது தாயுடன் வளர்ந்து வருகின்றது. இருப்பினும் தந்தையும் முக்கியம் என்பதால் தந்தையின் பெயர் இணைத்துச் சூட்டப்பட்டுள்ளது என நீதிபதி தெரிவித்தார்.



# வெள்ளத்துள் நியூயோர்க் முழு நகரமும் முடங்கியது

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் தொடர்ந்து இடைவிடாமல் மழை கொட்டித் தீர்த்ததால் அந்நகரமே முடங்கிப் போனது.

மழையால் வீதிகளில் வெள்ளம் ஆறு போல ஓடியது. விமான நிலையம் மற்றும் ரயில் நிலைய சுரங்கப் பாதைகளை வெள்ளம் சூழ்ந்தது.

இதனால் ரயில் நிலைய சுரங்கப் பாதைகள் அனைத்தும் மூடப்பட்டன. ரயில்களும் ரத்து செய்யப்பட்டதால் பல மணி நேரம் பயணிகள் தவிப்புக்கு உள்ளானார்கள்.

தாங்கள் செல்ல வேண்டிய இடங்களுக்குச் செல்ல முடியாமல் தவித்தார்கள். நியூயோர்க் நகர வீதிகளில் தண்ணீர் தேங்கியதால் வாகன போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. வாகனங்கள் நீண்ட தூரத்துக்கு அணிவகுத்து நின்றன.

பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியே வராமல் வீட்டுக்குள்ளேயே முடங்கினர். தொடர்ந்து மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என வானிலை மையம் தெரிவித்துள்ளது.

## கடலுக்கு மேலாக 350 கி.மீ. வேகத்தில் புல்லட் ரயில்

# சீனாவின் தரமான சம்பவம்!

கடலுக்கு மேல் பாலங்களை அமைத்து அதில் புல்லட் ரயிலை இயக்கி சாதனை படைத்திருக்கிறது சீனா. இதன் மூலம் புல்லட் ரயில் அறிவியல் தொழில் நுட்பத்தில் சீனா தன்னை மீண்டும் முதலிடத்தில் நிலை நிறுத்திக்கொண்டிருக்கின்றது.

புல்லட் ரயில் தொழில்நுட்பத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு வரை ஜப்பான்தான் கோலோச்சியிருந்தது. ஆனால், தற்போது சீனா உருவாக்கியுள்ள புல்லட் ரயில்கள் ஒட்டு மொத்த உலக நாடுகளையே மெர்சலடைய வைத்துள்ளன.



அந்த வகையில் நேற்றுமுன்தினம் (30) தென்கிழக்கு புஜியான் மாகாணத்தில் உள்ள முக்கிய நகரங்களை இணைக்கும் வகையில் புல்லட் ரயில் சேவையை சீனா தொடங்கியது. இந்த ரயில் கடலுக்கு மேலே பயணிக்கும் என்பதுதான் இதன் சிறப்பம்சம்.

தாய்வானின் ஜலசந்தியின் மேற்கு கடற்கரையில் உள்ள புஜியன் நகரின் தலைநகர் புஜோ மற்றும் வணிக மையமான ஜியாமென் உட்பட 5 நகரங்களை இந்த ரயில் இணைக்கின்றது.

குறிப்பாக புஜோ-ஜியாமென் இடையே உள்ள 277 கிலோ மீற்றர் தொலைவை இந்த ரயில் வெறும் 55 நிமிடங்களில் கடக்கின்றது. இந்த புல்லட் ரயிலின் அதிகபட்ச வேகம் 350 கிலோ மீற்றர் ஆகும். இவ்வளவு வேகத்தில் ரயில் செல்கிறது எனில் அதற்கான பாதைகள் பலமாக இருப்பது அவசியமாகும்.

இந்த ரயில் பாதைக்கான கட்டமைப்புகளை சீனா, 2017ஆம் ஆண்டு தொடங்கியது. இந்தக் கட்டுமானங்கள் அனைத்தும் நிலநடுக்கங்களைத் தாங்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளதால் நீண்ட காலத்துக்கு இந்த வழியாக புல்லட் ரயில் இயக்கப்படும் என்று சீன அதிகாரிகள் கூறியுள்ளனர்.

சில நாடுகளில் இந்த புல்லட் ரயில் சேவைகள் இருந்தாலும், இந்த ரயில் தடத்தின் ஒட்டுமொத்த தூரங்களில் 3இல் ஒரு பங்கு சீனாவில்தான் இருக்கிறது.

சீனாவில் ஒவ்வொரு ஆண்டும் இந்த புல்லட் ரயில் பாதைகள் நீடிக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு மேலும் இரண்டாயிரத்து 500 கிலோ மீற்றர் அளவுக்கு பாதைகள் நீடிக்கப்பட்டுள்ளன. இதனால் சீனாவின் புல்லட் ரயில் பாதையின் தூரம் 44 ஆயிரத்து 500 கிலோ மீற்றராக அதிகரித்திருக்கிறது. இது 2025ஆம் ஆண்டில் 50 ஆயிரம் கிலோ மீற்றர் அளவுக்கு அதிகரிக்கும் என்று அந்நாட்டு அதிகாரிகள் கூறியுள்ளனர்.



# இன்று உலக குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு குடியிருப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது


- முனீரா அபூபக்கர் -

உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு தேசிய வைபவம் இன்று காலை 9.00 மணிக்கு பத்தரமுல்ல, செத்சிறிபாய (இரண்டாம் கட்டம்) 11 ஆவது மாடியில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நடைபெறவுள்ளது.

1986 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் மாதத்தின் முதல் திங்கட்கிழமை உலக குடியிருப்பு தினமாக (World Habitat Day) அறிவிக்கப்பட்டது.

1985 ஆம் ஆண்டில், மேற்கிந்தியத் தீவுகளில் ஒரு தீவான ஜமைக்கா நாட்டின் கிங்ஸ்டன் நகரிலே ஒன்றுகூடிய ஐக்கிய நாடுகள் சபையின் மனித குடியிருப்புக்கள் ஆணைக்குழு, அதன் வருடாந்த அமர்வில் ஆண்டுதோறும் உலக குடியிருப்பு தினமாக அறிமுகப்படுத்தியது.

அந்த நேரத்தில் மாநாட்டில் கலந்து கொண்ட இலங்கைப் பிரதமர் ரணசிங்க பிரேமதாச இலங்கைப் பிரதிநிதிக் குழுவிற்குத் தலைமை தாங்கி, உலக குடியிருப்பு தினம் பற்றிய யோசனையை முதன்முறையாக உலக மனிதக் குடியிருப்பு அமைப்பிடம் முன்வைத்தார். சர்வதேச வீடமைப்பு வாரம் மூலம், உலகின் சகல மனிதக் குழுமங்களின் அவதானத்தை வீடமைப்பு மற்றும் குடியிருப்பின் மீது




செலுத்தப்பட்டது.

அதன்படி இவ்வருட உலக குடியிருப்பு தினம் இன்று திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்படுகிறது. கடந்த 37 ஆண்டுகளில், வீடுகள் மற்றும் குடியிருப்புகள் தொடர்பான பல்வேறு கருப்பொருள்களின் கீழ் உலக வாழ்விட தினம் கொண்டாடப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் உலக குடியிருப்பு தினம் ஒரு குறிப்பிட்ட கருப்பொருளின் கீழ் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டின் கருப்பொருள் "ஒரு பாதுகாப்பான நகர்ப்புற பொருளாதாரம்" ஆகும்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு ஐக்கிய நாடுகளின் மனித குடியிருப்பு திட்டத்தின் (ருே-உயடிவையவ) பிரதிநிதி அமைப்பாகும், இது உலக குடியிருப்பு தினத்தை உலகம் முழுவதும் செயல்படுத்துகிறது.

அதன்படி, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கு அமைவாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு பல விசேட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு குடியிருப்பு வாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. அந்த வாரத்தில் 500 பயனாளிகளுக்கு வீட்டுறுதிப் பத்திரம் வழங்கப்படவுள்ளது.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரையின் பிரகாரம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் மாவட்ட மட்டத்தில் வீட்டுறுதிப் பத்திரம் வழங்கும் வேலைத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த உரிமைப் பத்திரங்களை வழங்கும் வேலைத்திட்டத்தை அடுத்த ஒரு வருடத்திற்குள் முடிக்குமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதுமட்டுமின்றி, பாடசாலை மாணவர்களின் கலைத்திறனை மேம்படுத்தும் வகையில் நடத்தப்பட்ட சித்திரக் கண்காட்சி மற்றும் நடனப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், குறும்பட விழாவில் வெற்றி பெற்றவர்களுக்கும் பிரதமர் இன்று சான்றிதழ் மற்றும் பணப் பரிசுகளை வழங்கி வைப்பார்.

இது தவிர, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு நகர்ப்புற குடியிருப்புகளை வீட்டு பொருளாதார அலகுகளாக மாற்றுவதற்கான திட்டங்களை செயல்படுத்தும்.

# யாத்திரிகர்கள் பயணித்த பஸ்ஸை இரவில் தாக்கிய ஒற்றை யானை!

அநுராதபுரம் – தந்திரிமலை பிரதான வீதியின் மணிங்கமுவ – ஓயாமடுவ பிரதேசத்தில் யாத்திரீகர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்றை காட்டு யானை தாக்கியுள்ளது.

நேற்று முந்தினம் இரவு இடம்பெற்ற தாக்குதலில் பஸ்ஸ/க்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக த் தெரிவிக்கப்படுகிறது.

மாத்தறையிலிருந்து அநுராதபுரம் நோக்கி யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸையே இந்தக் காட்டு யானை தாக்கி



யுள்ளது.

இந்த யானை அப்பகுதியில் பல உயிர்களைக் காவு கொண்டுள்ளதுடன், வீடுகளுக்கும் பலத்த சேதங்களை ஏற்படுத்தியுள்ளதாகவும், இதற்கு முன்னரும் வீதியில் செல்லும் வாகனங்களை தாக்கியுள்ளதாகவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல முறை தெரிவித்தும் தீர்வு கிடைக்கவில்லை என்றும் கிராம மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

## குருந்தூர்மலை விடயத்தில் நடந்து கொண்டமை போல

# கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி விவகாரத்திலும் அச்சுறுத்தி உண்மைகளை மூடிமறைக்க முயல்வார்களா?

## ரவிகரன் கிளப்பும் அச்சம்



நீதிபதி சரவணராஜாவிற்கு குருந்தூர்மலை விவகாரத்தில் அரசதரப்பால் அரசியல் ரீதியாகப் பிரையோகிக்கப்பட்ட மனஅழுத்தம் மற்றும் உயிர் அச்சுறுத்தல் காரணமாக அவர் தனது பதவியைத் துறந்து இந்த நாட்டை விட்டு வெளியேறியுள்ள சூழலில், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்திலும் அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள் பிரயோகிக்கப்பட்டு உண்மைத்தன்மை மூடி மறைக்கப்படுமோ என்ற அச்சம் எழுவதாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சர்வதேச சிறுவர்தினமான ஒக்ரோபர் நேற்று ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்த நிலையில் அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே ரவிகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

சர்வதேசரீதியில் சிறுவர்களும், முதியவர்களும் ஒக்ரோபர் முதலாவது நாளில், தமக்கான தினத்தில், மகிழ்வோடிருக்கின்றனர்.

இந் நிலையில் இறுதிக்கட்ட போர்க் காலத்தில் இராணுவத்திடம் கையளித்த சிறார்களையும், உறவுகளையும் மீளக் கையளிக்குமாறு வலியுறுத்தி எமது உறவுகள் இரண்டாயிரம் நாள்களுக்கு மேலாக பல்வேறு துன்ப துயரங்களுக்கு மத்தியில் தொடர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நாட்டில் நீதித் துறையின் சுயாதீனத் தன்மைக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது. குறிப்பாக அரசியல் ரீதியாக அரச தரப்புக்கள் முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவிற்கு அழுத்தங்களைப் பிரயோகித்து, உயிர் அச்சுறுத்தல் விடுத்து இவ்வாறாக பல வழிகளிலும் நீதிபதியைத் துன்புறுத்திய நிலையில் நீதிபதி தனது பதவியைத் துறந்து இந்த நாட்டிலிருந்து வெளியேறியிருக்கின்றார்.

தற்போது கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரம் இடம்பெற்று வருகின்றது. முல்லைத்தீவு நீதிபதி, சட்டவைத்திய அதிகாரி, தொல்லியல் துறையினர் ஆகிய தரப்புக்களின் பங்கேற்புடன் இந்த முனிதப் புதைகுழி அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறான சூழலில் அரசியல் ரீதியாக அரச தரப்புக்கள் பிரயோகித்த அழுத்தங்கள் மற்றும் அச்சுறுத்தல் நிலைமைகள் காரணமாக நீதிபதி இந்த நாட்டைவிட்டு வெளியேறியுள்ள சூழலில், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்திலும், அழுத்தங்கள் அச்சுறுத்தல்கள் பிரயோகிக்கப்பட்டு உண்மைத்தன்மை மூடி மறைக்கப்படுமோ என்ற அச்சம் எமக்குத் தோன்றியிருக்கின்றது – என்றார்.

# காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று நல்லூரில் கவனவீர்ப்புப் போராட்டம்





- எஸ். நிதர்ஷன்-

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சர்வதேச சிறுவர் தினமான நேற்று யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் போராட்டமென்றை நடாத்தியுள்ளனர்.

யாழ் நல்லூர்க் கந்தன் ஆலயத்திற்கு அருகாமையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலையில் இப் போராட்டம் நடைபெற்றது.

கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட பல நூற்றுக் கணக்கான சிறுவர்களை மீட்டுத்தர வேண்டுமென வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் யாழ் மாவட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தினமான நேற்று இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எமது பிள்ளைகளைக் காணவில்லை எனக் கடந்த பத்து வருடத்திற்கு மேலாக நாங்கள் போராடி வருகிறோம். ஆனால் இதுவரையில் இலங்கை அரசு எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் சர்வதேசமே எமக்கான நீதியைப் பெற்றுத் தர வேண்டும் எனக் கடந்த 14 வருடங்களாகக் கோருகிறோம். எனவே இனியும் தாமதிக்காது சர்வதேசம் காத்திரமான உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென மீண்டும் மீண்டும் கோரிக்கை விடுக்கின்றோம். – என்று போராட்டத்தில் ஈடுபட்டோர் கோரினர்.

# 25 லட்சம் ரூபா பெறுமதியான ஐஸூடன் மன்னார் முருங்கனில் ஒருவர் கைது!

(மன்னார் நிருபர்)

மன்னார் – முருங்கன் பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் இராணுவ புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக மன்னார் முருங்கன் பகுதியில் நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த பாரிய ஐஸ் போதைப் பொருள் கடத்தல் வெற்றிகரமாக சுற்றிவளைக் கப்பட்டு முறியடிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸாரும் குற்ற புலனாய்வு பிரிவினருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 25 லட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடத்தலில் ஈடுபட்ட முக்கிய வியாபாரி அப்பகுதியை விட்டு தப்பிச் சென்றுள்ளார் என்றும் முருங்கன்பிட்டி பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய மற்றும் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# மீலாத் தினத்தில் கலை நிகழ்வுகள்



(நூருல் ஹுதா உமர்)

கண்மணி நாயகத்தின் புனித பிறந்த தின மீலாத்தை முன்னிட்டு புத்தளம் கல்பிட்டி அல் மத்ரஸதுல் ஹத்தாகியா மற்றும் ஹிழ்ர் மகாம் அமைப்பின் குர்ஆன் மற்றும் ஹிப்ழ் மாணவர்களின் இஸ்லாமிய பாரம்பரிய கலை மற்றும் கலாச்சார நிகழ்வுகள் இடம் பெற்றன.

வருடா வருடம் இஸ்லாமிய மாதமான புனித ரபிஉனில் அவ்வழ் மாதம் பிறை 01 இல் புனித கொடியேற்றப்பட்டு அம் மாதம் பிறை 12 இல் புனித கொடி இறக்கி வைக்கப்பட்டு இன, மத, பேதம் கடந்து மூவின மக்களுக்கும் கந்தூரி அன்ன தானம் வழங்கி வைக்கப்படும்.

இந்த வருடமும் மாணவர்களுடைய இஸ்லாமிய கலை கலாசார நிகழ்வுகள் அல் மதரஸதுல் ஹத்தாகியா மற்றும் ஹிழ்ர் மகாம் அமைப்பின் தலைவர் அஷ்ஷேஹ் அஸ்செய்யது முபாறக் மௌலானா தலைமையில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் அஸ்செய்யது றஹ்மதுள்ளாஹ் மௌலான பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

# ஆலய வளாகத்தில மரங்கள் நடப்பட்டன!

(பழுவூரான்)

மட்டக்களப்பு வெல்லாவெளி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வளாகத்தில் பயன்தரும் மரங்கள் மற்றும் பழ மரக்கன்றுகள் ஆலய அறங்காவல் சபையினர் மற்றும் பொதுமக்களால் நடப்பட்டது.

ஆலய வளாகத்தில் நூறு தென்னக்கன்றுகள் ஏனைய பயன்தரும் பழமரக்கன்றுகள் நடும் வேலைத் திட்டம் சனிக்கிழமை (30) முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன், உதவிப் பிரதேச செயலாளர் துலாஞ்சனன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# சாய்ந்தமருதில் ஆயுள்வேத இலவச வைத்திய முகாம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது கிராமிய ஆயுள்வேத வைத்திய சாலையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இலவச ஆயுள்வேத வைத்திய முகாம் சாய்ந்தமருது கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை (27) இடம்பெற்றது.

இந்த ஆயுள்வேத வைத்திய முகாமுக்கு இந்தியாவின் கேரளவிலிருந்து வருகை தந்த பிரபல மருத்துவ நிபுணர் டாக்டர் ஸ்டாலின் சிகிச்சை வழங்கினார்.

இந்த வைத்திய முகாமில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.எல்.எம். றிபாஸ், ஆயுள்வேதப் பணிப்பாளர் எனப் பலரும் கலந்து கலந்து கொண்டனர்.

பொதுமக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு ஆலோசனையுடன் கூடிய மருத்துவ சிகிச்சையளிக்கப்பட்டது.





# முதியோர் தினத்தில் இரத்ததானம்

(அ.அஸ்வர்)

சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு காத்தான்குடி முஸ்லிம் முதியோர் இல்லத்தின் ஏறட்பாட்டில் இரத்ததான நிகழ்வு இன்று (01) ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது.

முதியோர் இல்லத்தின் தலைவர் ஓய்வு பெற்ற அதிபர் கே.எம்.ஏ. அஸீஸ் தலைமையில் ஆரம்பமான இந்த இரத்த தான நிகழ்வில் ஆண்கள், பெண்கள் இளைஞர், யுவதிகளென பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

காத்தான்குடி தள வைத்தியசாலையின் இரத்த வங்கிக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி டாக்டர். அலீமா றஹ்மான் தலைமையிலான குழு இரத்ததான நிகழ்வில் இரத்தத்தைச் சேகரித்தது.



# பாண்டிருப்பு திரௌபதையம்மன் ஆலய தீ மிதிப்பு!

(பழுவூரான்)

கிழக் கிலங்கையின் வரலாற்றுச் சிறப்பு மிக்க பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவ திருவிழாவின் இறுதி நாளான வெள்ளிக் கிழமை (29) பக்தர்களின் அரோகரா கோசங்களின் மத்தியில் தீ மிதிப்பு இடம் பெற்றது.



# இன்றைய ராசி பலன்கள் - 02.10.2023

## மேஷம்

வாழ்க்கையில் உன்னதமான குறிக்கோள்களை அடைய உங்களை நீங்களே உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள். இன்றை நாள் உங்களின் பொறுமையை சிறிது சோதிக்கும் நாளாக அமையும்.

இன்று இறுக்கமான வேலை காரணமாக பிஸியாக இருப்பீர்கள். பணியில் வெற்றி காண உங்கள் சமயோசித புத்தியை பயன்படுத்த வேண்டும்.

பதட்டம் காரணமாக உங்கள் துணையுடன் பேசும் போது விரக்தியை வெளிப்படுத்துவீர்கள். அதை தவிர்க்க நேர்மறை எண்ணத்துடன் செயல்படுங்கள்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். சேமிப்பு குறைந்து காணப்படும். அதனால் கவலைகள் ஏற்படலாம்.

இன்று ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. தலைவலியால் அவதி ஏற்படும். பிரார்த்தனை மற்றும் தியானம் மேற்கொள்ளுங்கள்.

## ரிஷபம்

உற்சாகமான கதைகளை படிப்பதன் மூலம் வெற்றியின் உயரத்தை தொடுவதற்கான உந்துதல் இன்று உங்களுக்கு கிடைக்கும்.

இன்று அதிக முயற்சியுடன் பணியாற்ற வேண்டும். பொறுமையுடன் இருந்தால் வளர்ச்சி காணலாம்.

மகிழ்ச்சியாக இருப்பதற்கு சிறிது அனுசரித்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

நிதி சம்பந்தமான வளர்ச்சிகள் இன்று உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்காது. இன்று உங்கள் கவத்தை ஈர்க்கும் வகையில் சில சம்பவங்கள் நடக்கலாம்.

சிறிது மன அழுத்தம் இருந்தாலும் தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். நேர்மறை எண்ணத்துடன் இருங்கள்.

## மிதுனம்

இன்று உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். இன்று முழுவதும் நீங்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று பணியிட சூழ்நிலை சாதகமாக இருக்காது. வேலையின் போது கவனக் குறைவு ஏற்படலாம்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் சில குறைபாடுகள் காணப்படலாம். அதில் கவனம் செலுத்தினால் அமைதியை பராமரிக்க முடியும்.

இன்று வரவும் செலவும் சேர்ந்தே காணப்படும். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். பல்வலியால் அவதிகள் நேரும். உணவில் கட்டுப்பாடு மேற்கொள்வது நல்லது.

## கடகம்

இன்று ஆன்மீகத்தில் ஈடுபடுவீர்கள். உங்கள் செயல்களை சிறந்த முறையில் செய்ய அதனை ரிலாக்ஸ்டாக செய்யுங்கள்.

வேலையில் நல்ல முடிவுகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் பணியை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

குடும்பத்தில் அமைதியை பராமரிப்பீர்கள். நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணம் தாராளமாக இருக்கும். ஊக்கத் தொகையாகவோ அல்லது இதர சலுகைகளாகவோ இன்று நீங்கள் பணத்தை பெறுவதற்கு வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.இன்றைய நாளை நீங்கள் நல்ல முறையில் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவீர்கள்.

## சிம்மம்

இன்று பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் பணியின் வளர்ச்சி குறித்த கவலை இருக்கும். தற்போதைய கடமைகளில் அதிக கவனம் செலுத்துங்கள்.

தொடர்பு குறைபாடுகள் காரணமாக குடும்ப உறவில் அசாதாரணமான நிலை இருக்கும். முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது அவசியம்.

நிதி வளர்ச்சி இன்று சாதகமாக இல்லை. ஸ்திரத்தன்மையை தக்க வைத்துக்கொள்ள நிதியை கவனமாக பராமரிக்க வேண்டும்.

அஜீரணக் கோளாறு அல்லது தோள் வலியால் பாதிக்கப்படுவீர்கள். உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.

## கன்னி

இன்று உங்களிடம் காணப்படும் பயம் காரணமாக உங்கள் தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். ஆதனால் உங்கள் முன்னேற்றத்தில் தடை இருக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

இன்று மனதை ஒருமுகப்படுத்தி பணியாற்ற வேண்டியது முக்கியம். நீங்கள் தொழில் முறை அணுகுமுறையை பராமரிப்பது நல்லது.

அன்பின்மை காரணமாக குடும்ப நல்லுறவு பாதிக்கப்படும். குடும்பத்திற்கென நேரத்தை ஒதுக்க வேண்டும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இல்லை. உங்கள் செலவினங்கள் அதிகரித்து காணப்படும்.

இன்று ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். வயிறு உபாதைகள் நேரலாம்.

## துலாம்

திட்டமிட்ட செயல்களின் மூலம் நீங்கள் வெற்றி பெறலாம். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு அமைதியையும் மன நிறைவையும் பெற்றுத் தரும்.

இன்று பணியிட சூழ்நிலை சுமுகமாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

அனுசரித்து நடந்தால் குடும்பத்தில் அமைதி நிலவும் அதனால் குடும்ப அங்கத்தினருள் நல்லுறவு ஏற்படும்.

இன்று உங்கள் வருமானம் அதிகரிக்கும். உங்களால் சேமிக்க இயலும்.

நீங்கள் வருத்திக் கொள்ளாமல் இருந்தால் இன்று உங்கள் ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும். அதிகம் யோசிக்காமல் உங்கள் பணிகளை ஆற்றுங்கள்.

## விருச்சிகம்

இன்று நீங்கள் செய்யும் செயல்களில் கவனம் அத்தியாவசியமாக தேவைப்படும்.

முறையாக பணியை மேற்கொள் நீங்கள்இன்று அனுசரித்து நடக்க வேண்டும். அது உங்களை வளர்ச்சிப் பாதைக்கு அருகில் அழைத்துச் செல்லும்.

சில சம்பவங்களால் மன அமைதி கெடும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவ பெரியவர்களிடம் ஆலோசனை பெறுங்கள்.

இன்று உங்கள் நிதிகளை பராமரிப்பதில் நீங்கள் மிகவும் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பிரார்த்தனை மூலமாக நீங்கள் நேர்மறை ஆற்றல் பெற முடியும்

# இன்றைய ராசி பலன்கள் - 02.10.2023

## தனுசு

இன்று நீங்கள் நம்பிக்கை மற்றும் உறுதியுடன் செயல்பட வேண்டும்.

எதிர்பார்க்கும் பலன் கிடைக்க நீங்கள்அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். நீங்கள் அதிகமாக வேலை செய்வதன் மூலம் உங்கள் திறமையை உணர முடியும்.

குடும்ப உறுப்பினர்களிடம்ஒற்றுமை குறைந்து காணப்படும். இன்று சுப நிகழ்ச்சிகள் நடப்பதற்கான சாத்தியம் இல்லை.

இன்று நிதி வளர்ச்சி சாதகமாக இல்லை. பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

அதிக வேலை காரணமாக களைப்புடன் காணப்படுவீர்கள். எண்ணெய்ப் பதார்த்தங்கள் உண்பதை தவிர்க்கவும்

## கும்பம்

ஆன்மீக காரியங்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வது உங்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கும். நீங்கள் முன்னேற்றத்தைக் காண்பீர்கள்.

பணியில் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற முடியாத காரணத்தால் அதிருப்தி நிலவும்.

ஒற்றுமை குறைந்து காணப்படும். அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி சாதகமாக இல்லை. இன்று நிதிநிலையை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

பாதுகாப்பற்றதாக உணர்வதால் ஆரோக்கியம் பாதிக்கப்படும். இரவில் உறக்கமின்மை ஏற்படும்.

## மகரம்

உங்கள் வாழ்வில் செழிப்பைக் காண்பதற்கு நீங்கள் விஷயங்களை நல்ல முறையில் திட்டமிடல் வேண்டும்.

வேலையின் போது பதட்டம் காணப்படலாம். பணிச் சுமையை சமாளிக்க வேண்டியிருக்கும்.

குடும்ப உறவில் அன்பு குறைந்து காணப்படும். நெருக்கமானவர்களுடன் பேசும் பொழுது கவனமாகப் பேச வேண்டும்.

இன்றைய நாள் நிதி வளர்ச்சிக்கு சாதகமாக இல்லை. இன்று உங்களால் கணிசமான தொகை சேமிக்க இயலாது.

இன்று உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்.

## மீனம்

இன்றைய முக்கியமான நிகழ்வுகளில் கவனம் செலுத்த வேண்டும்.

பணியிடச் சூழ்நிலை சாதகமாக உள்ளது. நல்ல பலன்கள் கிடைத்து மகிழ்வீர்கள்.

நல்லுறவில் இணக்கம் குறைந்து காணப்படும். புரிந்துணர்வும் அனுசரனையும் இருந்தால் சரிகட்டிவிடலாம்.

இன்று வரவும் செலவும் சேர்ந்தே காணப்படும். திட்டமிட்டு பணத்தை சேமிப்பது நல்லது.

இன்று சில அசௌகரியங்கள் காணப்படலாம். பொறுமையுடன் இருங்கள். யோகா செய்யுங்கள்.





